தொலைவில் இருப்பவர்களை நேசிப்பது எளிது. அருகில் இருப்பவர்களை நேசிப்பது எளிதல்ல. நம் ஒவ்வொருவருக்குமான அன்பு நமது இல்லத்திலிருந்து தொடங்குவதால், எனவே உங்கள் இல்லத்தில் அன்பை விதையுங்கள்.

- புனித கல்கத்தா திரேசா

வாரந்தோறும் செல்லும் புதிய தலைமுறை. பெற்றோர், உடன்பிறந்தோர் அல்லது சொந்தங்களோடு எத்தனை முறை ஒன்றாக சேர்ந்துச் செல்வதைப் பார்த்திருக்கிறோம் என்பதைக் கேட்டுக் கொண்டால், இந்த எதார்த்தத்தின் உண்மை நிலை புரியும்.

இன்றைய நமது நவீன வாழ்க்கை முறை, குடும்ப கூட்டுமைப்பின் தேவைக்கு ஏற்புடையதாக இருக்கிறதா? அல்லது நமது குடும்பத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நமது வசதிக்காக அல்லது தேவைக்காக மட்டுமே நடக்கிறதா? வாரத்திற்கு ஒருமுறை கிறிஸ்துவே நமது வாழ்வின் மையம் என பிரகடனம் செய்து விட்டு, நமது சுய ஆசைகளால் நமது வாழ்வு அலைக்கழிக்கப்படுவதற்கு நாம் அனுமதிக்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு நன்கு ஊன்றியிருந்த கிறிஸ்துவச் சமூக அமைப்பின் அடிப்படை தேவைகளைக் கைவிடும் அளவுக்கு நமது நவீனக்கால குடும்பங்கள், கிறிஸ்துவை விட்டு விலகி விட்டனவா? அதிச சமூகங்களின் ஈடுபாடுக் குறைவு என கடந்த சில ஆண்டுகளாக நாம் விவாதித்து வருவதற்கு காரணம் என்ன? நமது கண்முன்னே, படிப்படியாக சமூகம் சீர்குலைந்து வரும் உண்மை நிலையை நாம் உணருகிறோமா?

இயேசு கட்டளையிட்டது (யோவான்15:12) போல், ஒருவரையொருவர் அன்பு செய்வதை நோக்கி முன்னெடுக்க வேண்டும். கிறிஸ்து கட்டளையிட்டவாறு, நமக்கு அப்பால், நமது பார்வையைச் செலுத்த வேண்டும். நாம் என்பதை விடுத்து மற்றவர்கள் மீது நமது கவனத்தை செலுத்துவோம். அதனை நமது குடும்பத்திலிருந்து தொடங்குவோம். நமது உற்றார், அண்டை அயலாரிடமிருந்து தொடங்கி, முன்பொரு காலத்தில் இருந்த பாசப்பிணைப்பை ஏற்படுத்துவோம். நமது செப வாழ்விலும், குடும்ப மற்றும் சமூக அருட்சாதன வாழ்விலும் தேய்வு நிலை ஏற்பட்டிருக்கும் நிலையை ஏற்றுக் கொள்ள நாம் தயாராக வேண்டும். இல்லையென்றால், குடும்ப அமைப்புமுறை சிதறுவதையும், கருத்தடை கலாச்சாரம் ஊடுருவதையும், குடும்ப வன்செயல் அதிகரிப்பதையும், தனித்து வாழும் குடும்பங்கள் பெருகி வருவதையும் கண்கூடாக காணப் போகிறோம். இந்த உண்மைநிலையை உணர்ந்து, நமக்கென்ன என்ற போக்கு மாறி, விழித்தெழ வேண்டும்.

குடும்பமே திருச்சபையின் அடித்தளம். தூய ஆவியால் ஆட்கொள்ளப்படும் குடும்பங்கள், திருச்சபையாக உருவெடுக்கின்றன. அன்பாலும் பக்தியாலும் பிணைக்கப்படும் திருச்சபை சமூகங்கள், குணமளிப்பு வரத்தை பெறுகிறது என சமூக ஆய்வுகள் காட்டுகின்றன. நம்மை அன்பு செய்பவரை மட்டும் அல்லாது ஒவ்வொருவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது நமது கிறிஸ்துவ விசுவாசம். அதுவே இயேசுவின் போதனை. கடவுள் நம்மை தேர்ந்து கொண்டார், பிறரை நாம் அன்பு செய்யும் போது அவரது அன்பின் ஆழத்தையும் ஆற்றலையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். இவ்வாறு நாம் செய்யாத வரை, இன்னல் இடர்களை சந்திக்கும் தனிநபராகவே இருப்போம். ✝

## வாரம் ஒரு வசனம்

ஒவ்வொருவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது நமது கிறிஸ்துவ விசுவாசம்.


INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio



6 மே 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்


## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# பிறரை நேசிக்கும்



குடும்பத்திலிருந்தே அன்பு விளையும். இயற்கையான பெற்றோரோ, தத்துப் பெற்றோரோ பாதுகாப்பாளரோ இருந்தாலும் அன்பு என்பது குடும்பத்திலிருந்தே முதலில் தோன்றும். எந்தவோர் குடும்பத்திலும் இயற்கையாகவே உறவுகள் பின்னி பிணைத்திருக்கும். நவீன கால சமூக அமைப்புமுறையைக் கொண்ட புதிய தலைமுறையை உறவுமுறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுக் குறைவு. பழைய தலைமுறையினரை அவர்கள் ஒதுக்கி வைத்து விட்டனர் அல்லது நமது நவீன குடும்பங்கள் பழைய தலைமுறை பழக்கத்தைப் புறக்கணித்து விட்டது எனலாம். நாடு முழுவதும் காளானை போல் அங்காங்கே முளைத்திருக்கும் கடைத்தெருக்களுக்கு

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 7ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்


## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# நற்செய்தி அறிவிக்கும்

இயேசு நம்மை அழைக்கிறார்... அவரைப் பின்செல்ல, அனைவருக்கும், உலகின் எல்லா மூலைக்கும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும், நமது சொந்த குடும்பங்களுக்கும் அவரது அன்பையும் நற்செய்தியையும் பரப்புவோம். இந்தப் பணியில், அவரது ஆற்றலுடனும் அன்புடனும் சிலுவையைத் தூக்கிச் செல்லத் தொடங்கும் போது நம்மை அவர் புனிதப்படுத்துகிறார். இந்த பணியில, தனிநபர் என்ற முறையிலும் குடும்பம் என்ற முறையிலும் அவர் அன்புடன்



அழைக்கிறார். திருத்துவத்தின் அன்பில் இணைகிறோம், நம் அனைவரையும் இணைக்கும் அதே அன்பை நாம் அறிந்து கொள்கிறோம். ஆண்டவரின் உயிர்ப்பு, ஒரு கிறிஸ்துவன் என்ற சுதந்திரத்தை வழங்குகிறது. உலகில் பல பிரச்னைகள் இருந்தாலும் நம்பிக்கை வளர்கிறது. நமது வாழ்வின் மையமாக இருக்கும் இயேசுவில்தான் நம்பிக்கை உண்டு என்பது நிதர்சனம்.

அரசியல்- பொருளாதார நிலையற்ற காலக்கட்டத்தில் நமது குடும்பங்கள் வாழும் நிலையில், இன மற்றும் சமய இன்னல்-இடையுறுகளை மறைமுகமாக நாம் தொடர்ந்து எதிர்நோக்கி வருகிறோம். நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தில் என்ன நேரிடும் என நாம் அஞ்சுகிறோம். இதுநாள் வரைக்கும் நேசித்து வந்த நாட்டை, சமயச் சகிப்புயின்மைக்கும் தீவிரவாதத்திற்கும் இழந்து விடுவோமோ என்ற பயம் நிலவுகிறது. தேசிய அரசியல்சாசன உணர்வு மங்கி விடுவோமோ என்ற அவநம்பிக்கை ஏற்படுகிறது.

இயேசு மற்றும் நமது பரலோகத் தந்தையின் கரத்தில் நமது பிள்ளைகளை ஒப்படைத்து செபிக்கும் பெற்றோர்களாகிய நம்மைப் போல், தமது பரலோகத் தந்தையிடம் நமக்காக இயேசு மன்றாடுவதை (யோவான் 17) நாம் பார்க்கிறோம். நம்மை வழிநடத்தி காத்து வரும்படி தமது தந்தையின் அன்பு அரவணைப்பில் நம்மை ஒப்படைக்கிறார். விசுவாச வாழ்விலும் உலக வாழ்விலும் நமது பிள்ளைகள் வழிகாட்டப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். 'தீயோனிடமிருந்து' நாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இயேசு செபிக்கிறார். இதனால் நமது வாழ்வில் பிரச்சனைகளும் சவால்களும் வராது என்பதல்ல. நமது பிள்ளைகளுக்கு ஆசிப்பது போல நமக்காகவும் இயேசு ஆசிக்கின்றார். விசுவாச வாழ்வில் நாம் வளர நம்மோடு வருகிறார். உலகிலும் நாட்டிலும் பிரச்னைகளை எதிர்நோக்கியப் போதிலும், கிறிஸ்துவர் என்ற முறையில், கடந்த வியாழக்கிழமை திருச்சபை கொண்டாடிய இயேசுவின் விண்ணேற்பு விழா, நம்மை முன்னேடுத்துச் செல்கிறது. உலகில் நமது வாழ்வின் மையத்தை இயேசு ஏற்கும் போது, நமது நம்பிக்கை அவரது தெய்வீகத்தில் இருப்பதை அது உணர்த்துகிறது. நம்மில் நமக்காக அவர் இருக்கும் வரை, எதற்கும் குறைவு இல்லை.

நமது அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் அவரது பாதுகாப்புக்காக நாம் செபிக்கும் போது கடவுள் நமது அண்டையில் இருப்பதை உணர முடியும். அவ்வாறே நமது வட்டாரத்திலுள்ள சமூகங்கள் அல்லது குடும்பங்களுடன் சேரும் போது அதே உணர்வை நம்மால் அனுபவிக்க முடிகிறது. தனிபட்ட குடும்பங்களாக அல்லாமல், கிறிஸ்து மைய குடும்பங்களாக, கிறிஸ்துவை அன்பு செய்யும் குடும்பங்களாக, இதற்கெல்லாம் மேலாக, நம்மில் கிறிஸ்து, அனைவரிலும் ஒன்றாக இருக்கிறார். ✝

> காதல் குருட்டுத்தனமல்ல; இறுதிவரை அது நிலைத்திருக்கும் . காதல் ஈடுபாடு கொண்டது; ஈடுபாடுகள் கூடும் போது அதன் குருட்டுத்தனம் குறைகிறது.
>
> - ஜி.கே.செஸ்தர்தன் (ஆங்கில எழுத்தாளர் & சிந்தனையாளர்)

### வாரம் ஒரு வசனம்

நமது நம்பிக்கை அவரது தெய்வீகத்தில் இருப்பதை.


INTERNAL CIRCULATION ONLY
BUL 19/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

குடும்பத்திற்குள் நிகழும் போது இதே மாதிரியான சூழ்நிலையை பல சமயங்களில் நாம் கடந்து வந்திருப்போம். அந்த இருண்ட காலத்தில் இதே மாதிரியான நம்பிக்கை ஒளி தெரியும் போது, நாம் கைவிடப்படவில்லை, கடவுள் தமது வாக்குறுதியை நிறைவேற்றுகிறார் என்ற தெம்பு ஏற்படும்.

கடவுள் கைவிடவில்லை, மகிழ்ச்சியடைந்த சீடர்கள் மத்தியில் கிறிஸ்து எவ்வாறு மீண்டும் தோன்றுகிறார் என்பதை நாம் பார்த்தோம். இது அவர்களது பணிக்கு வலிமை கொடுத்து. அவர்களின் பணியை (கிறிஸ்துவின் பணி) நிறைவேற்றுவதற்கு கொடைகளை அவர் வழங்கினார் அவர்கள் இருவரும் ஒரே பணியில் ஒருவரானார்கள். ஆவியால் புது தெம்படைந்த சீடர்கள் தங்களது பணியை மேற்கொள்ளும் உத்வேகமடைந்தனர். அது அவர்களை முன்னேறச் செய்து.

அவநம்பிக்கையில் உலகமே இருண்டு விட்ட சூழ்நிலையை நாம் எதிர்நோக்கும் போது நாமும் பதுங்குவோம், வெளியில் வர மாட்டோம். எதார்த்தத்தை அல்லது உண்மை நிலையை ஏற்க மறுப்போம், நமது வேதனையிலும் பாவத்திலும் உழலுவோம். மனநிம்மதியைத் தேடி அவ்வப்போது மது அருந்துவோம், நமது சூதாட்டப் பழக்கம் விடிவெள்ளியாக மாறிவிடும். ஆனால், எண்ணற்ற நமது வேதனைகளை தோல்விகளை, கடவுளிடம் அர்ப்பணிப்போம், அவ்வேளையில் அவர் இல்லாவிட்டால் நாம் வழிதவறி விடுவோம். நமது விசுவாசம் தடம்புரண்டு விடும். கிறிஸ்துவனுக்கு வேதனையும் துக்கமும் கூடபிறந்தது. அதிலிருந்து தப்பிக்க முடியாது. வாழ்க்கை துணையாக வரும் கடவுளே நமக்கு அரண், துன்பங்களையும் துயரங்களையும் போக்குபவர். இந்த துன்பமும் சவால்மிக்க காலங்களும் எல்லாம் மற்றவர்களது, நமதல்ல என்ற எண்ணம் கூடாது.

தந்தையாகிய கடவுள் நமக்காக போராட வேண்டும் என நினைப்பது, நமது அறியாமை. போராடுவோம், அனைத்தையும் அவரிடம் அர்ப்பணித்து விட்டு. மாறாக நம்பிக்கையற்ற மக்களாக இருந்தால் நாம் பலவீனர்கள். எத்தனை முறை இயேசு உங்களை அழைத்திருக்கிறார்? நமது வேதனை, துயரம், தீய பழக்கத்திலிருந்து மீண்டும் எழ எத்தனை முறை தமது ஆவியை நம்மீது ஊதி இருப்பார். மனந்திரும்ப வேண்டிய காலம் இதுவே, மீண்டும் எழுவதற்கு உதவ அவருக்கு வழிவிடுவோம். கடவுள் ஒருவரே, ஆயினும் அவரும் நாமும் ஒன்றல்ல. ஆனால் நம்மை அன்பு செய்பவரும் அவர், நம்மை கைவிட மாட்டேன் என உறுதியளிக்கிறார். "உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள்; ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்"(1பேதுரு 5:7). இதுவே நமக்கும் நமது குடும்பத்திற்குமான பணி. அவரது சீடர்களாக எழுவோம், அவரது பணியை மேற்கொள்வோம், சமாதானம் நமக்கு அருளப்படும். ✝

**உடலுக்கு உயிர் ஆன்மா இருப்பது போல், நமது ஆன்மாவிற்கு உயிர் தூய ஆவி.**

- புனித பீட்டர் டெமியன்

**வாரம் ஒரு வசனம்**

கடவுள் ஒருவரே, ஆயினும் அவரும் நாமும் ஒன்றல்ல.

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

20 மே 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பெந்தக்கோஸ்து ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# சுதந்திரமானது

**உங்களுக்கு அமைதி உண்டாகுக** - அச்சத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் சீடர்களுக்கு இயேசு கூறும் வார்த்தைகள். அது அவர்களுக்கு வாழ்வளிக்கும் வாயுவாக இருந்து. இருளில் நம்பிக்கையில்லாமல் இருந்த காலத்தில் நம்பிக்கை ஒளி படர்ந்தது. மீண்டும் அதே முதல் வாழ்த்துச் செய்தி கிடைத்தப்போது அது எல்லாமாக மாறியது, புத்துயிர் பிறந்தது. துயரச் சம்பவங்கள், குழப்பங்கள்

> எல்லாக் கிறிஸ்துவர்களின் விசுவாசம், திருத்துவத்தில் அடங்கியுள்ளது.
>
> - புனித ஆர்ஸ் சிசரியுஸ்

ஆதாரமாக இருக்கிறது. இன்றளவும் ஒருசில மறைப்போதகர்கள் இந்த மறைபொருளைப் புரிந்து கொள்வதற்கும் கற்பிப்பதற்கும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். வரலாற்றில் கடவுளின் வெளிப்பாடு இயேசு கிறிஸ்து என்ற நபர் வழியாக முழுமையாக தெரிந்தது. அவரே நம்மிடையே வந்தார். நமது வாழ்வைத் தொட்ட அவரது கைகளை நம்மால் உணர முடிந்தது. நலிவடைந்த ஆன்மாவை ஆறுதல் அளிக்கும் முகத்தைப் பாரக்க முடிந்தது. இதற்கெல்லாம் மேலாக, நம்மை மீட்கும் கருணைமிக்க உள்ளத்தை காண முடிந்தது. நமக்கான நேர் பாதை தெள்ளத்தெளிவாக தெரிவதை திடீரென நம்மால் பார்க்க முடிந்தது.

விசுவாசத்தில் அறிக்கையிடுவது போல, அவரை நேருக்கு நேர் பார்ப்பதே நமது தலையாய குறிகோள். புனித பவுல் (1கொரி.13:12) குறிப்பிடுவது போல், இறுதியில் தெய்வீகப் பாதையில் பரம்பொருளை நமது உள்ளத்திலும் ஆன்மாவிலும் பிரதிபலிப்போம். இந்த தெய்வீக மறைபொருள் அல்லது அற்புதம் நம் வாழ்வில் நிலைப்பெறுவதற்கு, இருள் சூழ்ந்த பாதையில் நடந்து செல்வதற்கு எல்லாம் ஆற்றலையும் அதிகாரத்தையும் வழங்கும் தூய ஆவியின் அருளால் நாம் ஆட்கொள்படுகிறோம்.

இதனால் நமது வாழ்வின் செயலை ஆராய்ந்து, தெளிவை நாடும் நாம், நம்மில் இருக்கும் கிறிஸ்துவில் அது பிரதிபலிக்கப்படுகிறதா? நமது வாழ்வின் மையமாக இருக்கும் கிறிஸ்துவிலிருந்து நாம் ஆற்றலையும் சக்தியையும் பெறுகிறோம். ஆனால் அவரிடமிருந்து எவ்வளவு தள்ளி நிற்கிறோம். எண்ணற்ற தடவை நாம் அவரை விட்டு விலகிச் சென்றிருக்கிறோம். அவரைப் போல் நடக்க, அன்பு செய்ய, செயல்பட நாம் மறுக்கும் போது அவரிலிருந்து நாம் விலகுகிறோம். அதே வேளை, நம் மீது பொழியப்பட்டிருக்கும் அருளையும் அற்புதத்தையும் கண்டு, இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறோமா? அவர் அளித்தக் கொடைகளுக்கு அவர் பாணியில் நன்றி கூறியிருக்கிறோமா? உன்னை நீ நேசிப்பது போல பிறரையும் நேசி.

திருத்துவத்துடன் சேர்ந்து செல்லும் பாதையே கடவுள் வகுத்தப் பாதை. அவர்கள் வழியாகவே நம்மை நாம் பார்க்க முடியும். அவர்களில் ஒருவராக உண்மையிலேயே நாம் மாறும் போது நம்மீது அவர் செலுத்திய அன்புக்கு நாம் பத்திரமானவர்களாகிறோம். எனவே நமக்கான பாதை தெளிவாக தெரிகிறது, கிறிஸ்துவின் ஒளியில் நடப்போம். முக்கியமாக, அதே பாதையில் மற்றவர்களையும் அழைத்துச் செல்வோம். ✝

**வாரம் ஒரு வசனம்**

அவரை நேருக்கு நேர் பார்ப்பதே நமது தலையாய குறிகோள்.


INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



27 மே 2018

NewBec
NEW WAY OF BEING CHURCH
திருத்துவ ஞாயிறு
எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்


## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# அவரை நேருக்கு நேர் பார்க்கும்

**“மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்”** (தொநூ.1:26). ‘நம்’ ‘உண்டாக்குவோம்’ என்ற இரு வார்த்தைகளும் பன்மையில் அமைந்துள்ளதை கவனித்தீர்களா! எல்லாம் வல்ல இறைவனை நாம் ஒருமையில் அழைப்பதில்லை. திருத்துவத்தின் மறைபொருளை புரிந்து கொள்வதற்கு இது

